# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 252/பேரூ/2022**
**நாள் : 08.02.2023**

சொ. அண்ணாதுரை,
புதுவயல் , சிவகங்கை மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புதுவயல் முதல்நிலை பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம். – எதிர் மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல், காமராஜ் நகர், 129, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சொ. அண்ணாதுரை என்பவரது 6.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.12.2022 அன்று பெறப்பட்டு 252/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், புதுவயல், காமராஜ் நகர், 129, என்ற முகவரியைச் சேர்ந்த திரு. சொ. அண்ணாதுரை தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எனது தகப்பனார் சா. சொக்கலிங்கம் என்பவரது பெயரில் மேற்கண்ட முகவரியில் கதவு எண்.129 என்ற எண்ணில் வரிவிதிப்பு செய்யப்பட்டிருந்தது இதன் அடிப்படையில் எனது தகப்பனார் பெயரிலேயே மின் இணைப்பும் பெற்று இன்றும் இருந்து வருகிறது. எனது தகப்பனார் சுமார் 17 வருடங்களுக்கு முன்பாக இறந்துவிட்ட நிலையில் எனது தகப்பனார் பெயரில் இருந்து வந்த வீட்டு வரியின் ரசீது கடந்த 07 ஆண்டுகளாக சந்திரா என்ற பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பின்னர் 129ஐ, 129A முருகேசன் - 1335, 129B மு. உமாதேவி 1336, 129C, சொ. சந்திரா – 1337 என்று பிரிவினை செய்து செயல் அலுவலர் கொடுத்துள்ளார். எனது தகப்பனார் இறந்த நிலையில் இறப்புச் சான்று, வாரிசு சான்று மற்றும் எனது ஒப்புதல் கடிதம் பெறாமல் போலியான ஆவணங்களைப் பெற்று மேற்படி நபர்களுக்கு வீட்டு வரி ரசீது செயல் அலுவலர் வழங்கியுள்ளார். எனது தகப்பனாருக்கு நான் மற்றும் எனது தம்பி சொ. அண்ணாமலை ஆகிய இருவரும் வாரிசுதாரர்கள் ஆவோம். இது குறித்து பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் எழுத்தர்

முத்துக்கிருஷ்ணன் ஆகியோருக்கு எழுத்து மூலம் மனு அளித்தால் முரணான பதிலை தந்து அலட்சியத்துடன், ஆணவத்துடனும் மிரட்டுகின்றனர். மாண்புமிகு சமூகம் இதனைக் கருத்தில் கொண்டு விசாரணை செய்து நடவடிக்கை எடுத்து எனக்கு நிவாரணம் பெற்றுத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி புதுவயல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 14.12.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.

இப்புகார் தொடர்பாக புதுவயல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 5.1.2023 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

“சிவகங்கை மாவட்டம் புதுவயல் முதல்நிலை பேரூராட்சியில் புகார்தாரரால் தெரிவிக்கப்பட்ட சொத்துவரியானது காலஞ்சென்ற திரு. சொக்கலிங்கம் பெயரில் இருந்ததினை அன்னாரின் வாரிசுதாரர்களான:

1. திரு. சொ. முருகேசன் (மகன்)
2. திரு. சொ. அண்ணாதுரை (மகன்) புகார்தாரர்
3. திரு. சொ. அண்ணாமலை (மகன்)
4. திருமதி. சொ. விஜயகுமாரி (மகள்)

ஆகியோர் கடந்த 03.01.2007-அன்று தங்களது தாயார் திருமதி சந்திரா என்பவர் பெயருக்கு சொத்துவரியினை பெயர் மாறுதல் செய்திட ஒப்புதல் பத்திரம் அளித்ததின் பேரில் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட 03.01.2007 தேதியிட்ட ஒப்புதல் பத்திர நகல் மேலான பார்வைக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

கடந்த 28.11.2016 அன்று திருமதி. சந்திரா தனது மகன்களில் ஒருவரான திரு. சொ. முருகேசன் என்பவருக்கு மேற்கண்ட சொத்தில் ஒரு பகுதி இடத்தை நோட்டரி பப்ளிக் மூலம் இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அளித்துள்ளார். மேற்கண்ட சொத்து அமைந்துள்ள இடம், பட்டா இல்லாத இடம் என்பதால் பத்திர பதிவு செய்யவில்லை என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு இனாம் செட்டில்மெண்ட் பெற்ற இடத்தில் திரு. சொ. முருகேசன் கட்டடம் கட்டி தனது பெயரிலும் தனது மனைவி திருமதி. மு. உமாதேவி பெயரிலும் சொத்துவரி பெற்றுள்ளார் என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது. திரு. சொ. முருகேசன் பெற்றுள்ள இனாம் செட்டில்மெண்ட் ஆவண நகல் மேலான பார்வைக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

திரு. சொ. அண்ணாதுரை (புகார்தாரர்) தெரிவித்துள்ளவாறு போலியான ஆவணங்கள் கொண்டு தற்போது பெயர் மாறுதல் எதுவும் செய்யப்படவில்லை. மேற்கண்ட பெயர் மாறுதல் மற்றும் சொத்துவரி விதிப்பு நடவடிக்கைகள் யாவும் கடந்த 2007 மற்றும் 2016-ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுவிட்டது. தற்போது எவ்வித பெயர் மாறுதலும் செய்யப்படவில்லை என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

நடப்பு நிதியாண்டில் சொத்துவரி விதிப்பு கீழ்கண்ட விவரப்படி உள்ளது.

| வ. எண் | வார்டு எண். | தெரு பெயர் | கதவு எண். | வரி விதிப்பு எண். | வரி விதிப்பாளர் பெயர் | தன்மை | சொத்து வரி தொகை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 14 | காமராஜ் நகர் | 129 | 1334 | சொ. சந்திரா | ஓடு | 92/– |
| 2 | 14 | காமராஜ் நகர் | 129A | 1335 | சொ. முருகேசன் | தார்சு | 214/– |
| 3 | 14 | காமராஜ் நகர் | 129B | 1336 | சொ. உமாதேவி | தார்சு | 200/– |
| 4 | 14 | காமராஜ் நகர் | 129C | 1337 | சொ. சந்திரா | தார்சு | 254/– |

புதுவயல் முதல்நிலை பேரூராட்சியில், பொதுமக்களின் கோரிக்கை விண்ணபப்பங்கள் பெறப்பட்ட நாளிலிருந்து 10 (பத்து) தினங்களுக்குள் முழுமையான நடவடிக்கை மேற்கொண்டு முடிவு செய்யப்பட்டு வருகின்றது என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்ளப்படுகிறது. புகார்தாரர் தெரிவித்துள்ளவாறு முறைகேடான நடவடிக்கைகளில் எந்த ஒரு பணியாளரும் ஈடுபடவில்லை என்ற விவரம் உறுதியளித்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகின்றது.

திரு. சொ. அண்ணாதுரை (புகார்தாரர்) தனது குடும்பத்தினருடன் உள்ள பிரச்சனைகளை தீர்வு கண்டிட பேரூராட்சியினை தவறான முறையில் ஈடுபடுத்தி சுயநலத்துடனும், முறைகேடாகவும் செயல்பட முனைந்து வருகிறார். இதற்கு உடன்படாத காரணத்தினால் தேவையற்ற வீணான குற்றச்சாட்டுகளை பேரூராட்சி அலுவலர்கள் மேல் சுமத்தி வருகிறார் என்பதனை பணிவுடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன்” என்று தெரிவித்துள்ளார்.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவத்திற்கு 18.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 29.12.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

18.01.2023 அன்று மனுதாரர் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புதுவயல் காமராஜர் நகர் எண் 129ல் அமைந்துள்ள 30 சென்ட் இடத்திற்கு எனது தந்தை சா. சொக்கலிங்கம் என்பவரின் பெயரில் சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டிருந்தது. சொத்து வரி விதிப்பு எண் 1064 ஆகும். ஆனால், புதுவயல் பேரூராட்சி அலுவலர்கள் முறையான ஆவணங்கள் இல்லாமல் கடந்த 2006ம் ஆண்டில் எனது தந்தை சா. சொக்கலிங்கம் என்பவரின் பெயரில் இருந்த சொத்தில் பாதி இடத்திற்கு அதாவது 15 சென்ட் இடத்திற்கு எனது தாயார் திருமதி சந்திரா என்பவரின் பெயருக்கு சொத்து வரி மாற்றம் (சொத்து வரி எண் 1334) செய்துள்ளனர். மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றம் செய்யும்போது 20 ரூபாய் பத்திரப் பேப்பரில் நான் மற்றும் எனது சகோதர சகோதரிகள் கையொப்பமிட்டு எனது தாயாரால் அளிக்கப்பட்ட ஒப்புதல் பத்திரத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என பேரூராட்சி அலுவலர்கள் எனக்கு தெரிவித்துள்ளனர். ஆனால், மேற்கண்ட ஒப்புதல் பத்திரத்தில் சில இடங்களில் அடித்தல் திருத்தல் காணப்படுகின்றன. மேலும் அதில் உள்ள கையொப்பங்களில் எனது

கையொப்பத்திற்கு பதிலாக எனது பெயரில் வேறு யாரோ எனது பெயரை எழுதி அண்ணாதுரை என கையொப்பமிட்டுள்ளார். எனது தந்தை இறந்த நிலையில், இறப்புச் சான்று மற்றும் வாரிசு சான்று போன்ற சான்றிதழ்களை பெறாமல் போலியான ஆவணங்களைப் பெற்று மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றம் நடைபெற்றுள்ளது. இது குறித்து பேரூராட்சி செயல் அலுவலர்களிடம் மனு அளித்தபோது முன்னுக்குப் பின் முரணான பதிலை தருகின்றனர். வாரிசுதாரர்களில் ஒருவரான என்னை நேரில் அழைத்து விசாரிக்காமல் மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றம் நடைபெற்றுள்ளது.

மேலும் 2016ல் எனது சகோதரர் திரு. சொ. முருகேசன் என்பவர் நோட்டரி பப்ளிக் கையொப்பத்துடன் கூடிய 28.11.2016 நாளிட்ட எனது தாயார் திருமதி சந்திரா அவர்களால் அளிக்கப்பட்ட இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் எனது சகோதரர் திரு. சொ. முருகேசன் என்பரின் பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டடுள்ளது.

எனவே எவ்வித உண்மை ஆவணங்கள் இல்லாமல் மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்றத்தை ரத்து செய்திட ஆவன செய்திடுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

18.01.2023 அன்று புதுவயல் முதல்நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"மனுதாரரின் புகாரில் கண்டுள்ள சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புதுவயல் காமராஜர் நகர் எண் 129ல் அமைந்துள்ள இடத்திற்கான சொத்து வரியானது மனுதாரரின் தந்தை திரு. சொக்கலிங்கம் என்பவரின் பெயரில் இருந்ததை அன்னாரின் வாரிசுதாரர்கள் தங்களது தாயார் திருமதி. சந்திரா என்பவரின் பெயருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்திட வேண்டி நோட்டரி பப்ளிக் கையொப்பத்துடன் கூடிய ஒப்புதல் பத்திரத்தை அளித்ததன்பேரில் திரு. சொக்கலிங்கம் என்பவரின் பெயரில் இருந்த சொத்து வரி அவரது மனைவி திருமதி. சந்திரா என்பவரின் பெயருக்கு 24.01.2007ல் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தை தெரிவித்து மேற்கண்ட ஒப்புதல் பத்திரத்தின் நகலை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

அதே போன்று 28.11.2016ல் மனுதாரரின் தாயார் திருமதி சந்திரா என்பவர் தனது மகன்களில் ஒருவரான சொ. முருகேசன் என்பவருக்கு மேற்கண்ட சொத்தில் சில பகுதி இடங்களை இனாம் செட்டில்மெண்ட் நோட்டரி பப்ளிக் மூலம் அளித்ததன் பெயரில் திரு. முருகேசன் என்பவருக்கு சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட சொத்து வரி பெயர் மாற்ற நடவடிக்கைகள் கடந்த 2007 மற்றும் 2016ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது என்கின்ற விவரத்தையும், தற்போது எவ்வித பெயர் மாற்றமும் செய்யப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் எனது 5.1.2023 நாளிட்ட விளக்க அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம், புதுவயல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

"மனுதாரர், சிவகங்கை மாவட்டம் காரைக்குடி புதுவயல் காமராஜர் நகர் எண் 129ல் அமைந்துள்ள 30 செண்ட் இடத்திற்கு தனது தந்தை சா. சொக்கலிங்கம் என்பவரின் பெயரில் சொத்து வரி விதிப்பு செய்யப்பட்டிருந்தது எனவும் சொத்து வரி விதிப்பு எண் 1064 எனவும் ஆனால், புதுவயல் பேரூராட்சி அலுவலர்கள் முறையான ஆவணங்கள் இல்லாமலும் அதாவது 15 செண்ட் இடத்திற்கு தனது தாயார் திருமதி சந்திரா என்பவரின் பெயருக்கு தனது தாயாரால் அளிக்கப்பட்ட ஒப்புதல் பத்திரத்தின் அடிப்படையில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது எனவும் மேலும் அதில் உள்ள கையொப்பங்களில் தனது கையொப்பத்திற்கு பதிலாக தனது பெயரில் வேறு யாரோ தனது பெயரை எழுதி அண்ணாதுரை என கையொப்பமிட்டுள்ளார் எனவும், மனுதாரரின் தந்தை திரு. சொக்கலிங்கம் என்பவரின் பெயரில் இருந்த சொத்து வரி அவரது மனைவி திருமதி சந்திரா என்பவரின் பெயருக்கு 24.01.2007ல் சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது எனவும் மேலும் 28.11.2016ல் மனுதாரரின் தாயார் திருமதி சந்திரா என்பவர் தனது மகன்களில் ஒருவரான சொ. முருகேசன் என்பவருக்கு மேற்கண்ட சொத்தில் சில பகுதி இடங்களை போலியான இனாம் செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் நோட்டரி பப்ளிக் மூலம் அளித்ததன் வகையில், திரு. முருகேசன் என்பவருக்கு, முறைகேடாக சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது எனவும் தெரிவித்துள்ளார்.

திரு. சொ. முருகேசன், திரு. சொ. அண்ணாதுரை (மனுதாரர்) திரு. சொ. அண்ணாமலை மற்றும் திருமதி. சொ. விஜயகுமாரி ஆகியோர் கடந்த 3.1.2007ல் தங்களது தாயார் திருமதி. சந்திரா என்பவரின் பெயருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்திட ஒப்புதல் பத்திரம் அளித்ததின் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டது எனவும் கடந்த 28.11.2016ல் திருமதி சந்திரா தனது மகன்களில் ஒருவரான திரு. சோ. முருகேசன் என்பவருக்கு மேற்கண்ட சொத்தில் சில பகுதி இடங்களை நோட்டரி பப்ளிக் மூலம் இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் அளித்துள்ளார் என்பதையும் அவ்விடத்தில் திரு. முருகேசன் கட்டடம் கட்டி தனது பெயரிலும் தனது மனைவி திருமதி மு. உமா தேவி பெயரிலும் சொத்துவரி பெற்றுள்ளார் எனவும் சொத்துவரி பெயர் மாற்ற நடவடிக்கைகள் கடந்த 2007 மற்றும் 2016ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டது எனவும் தற்போது எவ்வித பெயர் மாற்றமும் செய்யப்படவில்லை என்பது புதுவயல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கையிலிருந்து தெரியவருகிறது.

**பதிவு சட்டம் 1908, பிரிவு 17–ல் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது :**

**<u>Section 17 of the Registration Act, 1908 [Act 16 1908]</u>**

17. Documents of which registration is compulsory.— (l) The following documents shall be registered, if the property to which they relate is situate in a district in which, and if they have been executed on or after the date on which, Act No. XVI of 1864, or the Indian Registration Act, 1866, or the Indian Registration Act, 1871, or the

Indian Registration Act, 1877, or this Act came or comes into force, namely:—

(a) instruments of gift of immovable property;

(b) x x x x x

(c) x x x x x

(d) x x x x x

மேற்கண்ட பிரிவு 17 (a), பதிவு சட்டம், 1908 (சட்டம் 16 1908)-ன் படி அசையா சொத்துக்களை தானப் பத்திரம் எழுதி கொடுத்தால் அதை சட்டப்படி செல்லத்தக்கதாக்க கட்டாயம் பதிவு செய்திருக்க வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்படவில்லை என்றால் அவை சட்டப்படி செல்லத்தக்கது அல்ல. அந்த பத்திரங்களை கொண்டு உரிமை கோர முடியாது. ஆகையால் அதனடிப்படையில் வழங்கப்பட்ட சொத்து வரியும் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல.

மேலும், இந்நேர்வில் முறையான மற்றும் சட்டப்படி செல்லத்தக்க ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் புதுவயல் முதல்நிலை பேரூராட்சியில் திரு. சொ. முருகேசன் என்பவருக்கு கட்டடம் கட்ட அனுமதியளித்துள்ளதும் அவர் பெயரிலும் அவரது மனைவி திருமதி உமா தேவி பெயரிலும் சொத்து வரி விதித்துள்ளதையும் இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. எனவே, எவ்வித விதிமுறைகளையும் பின்பற்றாமல் இத்தகைய கண்மூடித்தனமான செயலுக்கு காரணமான சம்பந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கி அவர்கள் மீது உரிய விதிகளின் கீழ் கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

மேலும், சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்ட பேரூராட்சி செயல் அலுவலரின் 24.1.2007 நாளிட்ட சொத்துவரி பெயர் மாற்ற உத்தரவில் மேற்கண்ட சொத்துவரி பெயர் மாற்றம் செய்ததில் ஏதேனும் ஆட்சேபனையோ, நீதிமன்ற நடவடிக்கையோ அல்லது வில்லங்கமோ ஏற்பட்டால் மேற்படி பெயர் மாறுதல் உத்தரவு உடன் ரத்து செய்யப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நேர்வில் மனுதாரர் புதுவயல் முதல்நிலை பேரூராட்சியினை அணுகி தனது தந்தையின் பெயரில் சொத்து வரியினை முறையான ஆவணங்கள் இல்லாமல் மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவித்து இரத்து செய்யக்கோரிய மனுவினை சட்டப்படி செல்லத்தக்க உரிய ஆவணங்களை பரிசீலனை செய்து நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு எந்த நடவடிக்கையும் செயல் அலுவலர் மேற்கொள்ளாமல் இருந்துள்ளது, அவரது பணியில் அலட்சியமாகவும், கடமை தவறியும் செயல்பட்டுள்ளதை உணர்த்துகிறது.

எனவே, மனுதாரர் மேற்கண்ட சொத்துவரி பெயர் மாற்றம் குறித்து தனது ஆட்சேபனை மற்றும் எதிர்ப்பை தெரிவித்துள்ளதால், அவரது மனுவினை பேரூராட்சி செயல் அலுவலர் சட்டவிதிகளுக்குட்பட்டு ஆய்வு செய்து உரிய நடவடிக்கைகளை சட்டப்படி மேற்கொள்ளவும் இந்நேர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்திற்கு 30 நாட்களுக்குள் அறிக்கையினை அனுப்பிவைக்குமாறும் 45 நாட்களுக்குள் முடிவறிக்கையினை (Compliance Report) இம்முறைமன்றத்திற்கு அனுப்புமாறும் புதுவயல் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

இந்நேர்வில் நோட்டரி பப்ளிக் (Notary Public) சான்றின் அடிப்படையில் சொத்துவரி பெயர்மாற்றம் செய்திருப்பது இப்பொருள் தொடர்பான நடைமுறைக்கு (Procedure) மாறாக அமைந்துள்ளது. எனவே, இதுபோன்ற நிகழ்வுகளை முற்றிலும் தவிர்க்கும் வகையில் உரிய அறிவுரைகளை சுற்றறிக்கையின் வாயிலாக அனைத்து உதவி இயக்குநர்கள்/பேரூராட்சிகளின் செயல் அலுவலருக்கும் வழங்கிடுமாறும் அதன் நகலினை இம்முறைமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்மாறும் பேரூராட்சிகளின் இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

The Director of Town Panchyats is directed to keep a close vigil over the execution of the orders by the Town Panchayat Executive Officers within the stipulated period. This kind of deviation from appropriate procedure by the Executive Officers should be prevented by strict instructions from the HOD. The Assistant Directors of Town Panchyats should be also sensitized on such procedural violations and wanton biases committed by the Executive Officers during the process of issue of planning permission and levy of Property Taxes.

2023–ஆம் ஆண்டு, பிப்ரவரி 8–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. சொ. அண்ணாதுரை,
த/பெ. சொக்கலிங்கம்,
129, காமராஜ் நகர்,
புதுவயல் பேரூராட்சி,
காரைக்குடி வட்டம், சிவகங்கை மாவட்டம்.

2) செயல் அலுவலர்
புதுவயல் முதல்நிலை பேரூராட்சி,
சிவகங்கை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர்(பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம் / ஆணையாளர்,
ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி. நகர்,
சென்னை–28 (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

14/2/23

செயலாளர்.

14/2/23